1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தலைமை ஆசிரியர்களை நியமிக்கும்போது மாநிலம் முழுவதி லிருந்தும் பணி மூப்பின் அடிப்படையில் நியமிக்க வேண்டியிருப்ப தால் இந்தப் பிரச்சனை ஏற்படுகிறது. பணி மூப்பின் அடிப் படையில்தான் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு தரவேண்டியிருக் கிறது. தற்போது அரசு கல்விதுறை அதிகாரிகளுக்குச் சொலலி யிருக்கிற யோசனை, கூடியவரையில் பக்கத்து மாவட்டங்களில் நியமிக்க வேண்டும் ; அதிலும் குறிப்பாக தூரமாக இருந்தால் அப்படிப்பட்ட இடங்களில் ஜூனியர்களைப் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இப்போது அந்தப் பதவீ உயர்வு தர முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காரணம் ஏ.' விங்க், பி. விங்க்' இரண்டையும் இணைத்திருக்கிற உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் தடை உத்தரவு வாங்கியிருக்கிறார் கள். ஆகையால் பதவி உயர்வுக்குத் தடை இருக்கிறது என்றா லும் பணி மூப்பின் அடிப்படையில் தலைமை ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

நெமிலி கிராம உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்.

*வினா எண் 793—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம், நெமிலி கிராமத்தில் இருக்கும் உயர்நிலைப் பள்ளியில் 1975–76-ல் தலைமை ஆசிரியர் சம்பள பட்டுவாடாவில் அரசை மோசடி செய்து பணம் பெற்று கையாடல் செய்து எடுத்துச் செல்லப் பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொகை மோசடி செய்யப் பட்டது ?

(இ) அந்த ஆசிரியர் தற்போது பணியில் இருக்கிறாரா அல்லது வேலை நீக்கம் செய்யப்பட்டு உள்ளாரா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) 1975 மே மாதம் முதல் சூலை 1977 முடிய ரூ. 19,172 கையாடல் செய்யப்பட்டிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(இ) தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.